**2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் அறையில் பின்வரும் பொருள்கள் பற்றி அவசரக்கூட்டம் நடைபெறும்.**

**பொருள் எண்.1**

கீழ்க்கண்ட பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.188, நாள்.30.09.2019–ல் ரூ.18.80 இலட்சத்திற்கு வருவாய் நிதி 2019–20–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 22.11.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சி புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் இணைப்பு சாலையில் புதியதாக 8 எண்ணிக்கையிலான கடைகள் கட்டும் பணி | 18,80,000/- | 1. திரு.கே.குமார்<br>2. திரு.எஸ்.விவேக் | (-)0.11 %குறைவு<br>(+) 0.72 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(–)0.11 % குறைவாக கொடுத்துள்ள திரு.கே.குமார், அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

(கோப்பு எண்.5175/2019/இ1)

**தீர்மானம் எண்.265 (பொருள் எண்.1) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20–ன் கீழ், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.17349/2019/இ3, நாள்.16.10.2019–ல் ரூ.205.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25039/2019/DO1, நாள்.18.10.2019–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 26.11.2019–ல் நடைப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தங்களை மீளாய்வு செய்து 28.11.2019–ல் Price Bid திறக்கப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| Providing BT Road and Strom water drain with Culvert at Court East side road, Sakthivel nagar sepparai road, sengodampalayam ration shop road, Ettaimadi puthur, Kumaresapuram 6th cross upto Rain india owner house in Ward No.1, 2, 4, 6 - Package -I | 205.50 இலட்சம் | 1. M/s Balaji Construction, Tiruchengode.<br>2. M/s Anjaneya Artery Projects Private Limited, Tiruchengode. | (+) 4.50% அதிகம்<br>(+) 5.03 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(+)4.50% அதிகம் கொடுத்துள்ள M/s Balaji Construction, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை காட்டிலும் (+)4.50% கூடுதலாக ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.542/2019/இ1**

**தீர்மானம் எண்.266 (பொருள் எண்.2) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20–ன் கீழ், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.17349/2019/இ3, நாள்.16.10.2019–ல் ரூ.211.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25039/2019/DO1, நாள்.18.10.2019–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 26.11.2019–ல் நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தங்களை மீளாய்வு செய்து 28.11.2019–ல் Price Bid திறக்கப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| Providing BT Road and Strom water drain with Culvert at Avvai KSR Road, and cross streets, Kongumandabam opposite road cross streets, Malaikavalar kovil Road surroundings, Sanarpalayam Teachers colony to Kottakkadu road , Kollapatti cross streets, Karattupalayam Cylone colony,Salappalayam road in Ward No. 27,29,30,31,32 - Package -V | 211.60 இலட்சம் | 1. M/s Balaji Construction, Tiruchengode.<br>2. M/s Anjaneya Artery Projects Private Limited, Tiruchengode. | (+) 4.50% அதிகம்<br>(+) 5.26 % அதிகம் |

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(+)4.50% அதிகம் கொடுத்துள்ள M/s Balaji Construction, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை காட்டிலும் (+)4.50% கூடுதலாக ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.542/2019/இ1)

**தீர்மானம் எண்.267 (பொருள் எண்.3) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

திருச்செங்கோடு நகராட்சியில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் மூலம் 2018–19 நிதி ஆண்டிற்கு நடைபெற்று வரும் தணிக்கை முடிவுறும் தருவாயில் உள்ளதால் தணிக்கை தடை பத்திகளை தமிழில் டைப் செய்து 4 நகல்கள் பிரிண்ட் எடுத்து பைன்டிங் செய்ய 27.11.2019 அன்று நடைபெற்ற விலைப்புள்ளியில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினம் ரூ.25000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வேலையின் பெயர் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 2018-19 LOCAL FUND AUDIT PARA TAMIL TYPING, PRINTING & BINDING BOOKLET | 1. திருமதி. கௌசல்யா M/s Bright Browsing & Computer Center, Tiruchengode.<br>2. M/s Lakshmi Software Solutions, Tiruchengode.<br>3. Sri Muruga Computer Center, Tiruchengode. | ரூ.25,000/–<br>ரூ.27,000/–<br>ரூ.28,000/– |

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. கௌசல்யா Bright Browsing and Computer Center அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினம் ரூ.25000/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5544/2019/இ1)

**தீர்மானம் எண்.268 (பொருள் எண்.4) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 5</u>

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 கணபதி நகர் K.R Tools சக்திவேல் நகர், பழனி ஆண்டவர் கோவில் தோட்டம் ஆகிய பகுதிகளில் 19 தெருவிளக்குகள் 3–வது வார்டில் சேலம் ரோடு அம்மன் நகர் பகுதியில் 7 தெருவிளக்குகள் 10–வது வார்டில் சூரியம்பாளையம் தெரு 2, பகுதியில் 5 தெரு விளக்குகளும் 14–வது வார்டில் ராஜகவுண்டம்பாளையம் தென்னம்பிள்ளை காடு பகுதியில் 3 தெரு விளக்குகளும் அமைத்தரகோரி திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள், நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் நேரடி ஆய்வின் போது அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் இரவு நேரங்களில் சாலையில் செல்ல தெருவிளக்கு இல்லாததால் மிகவும் சிரமமாக உள்ளதால் மேற்கண்ட இடங்களுக்கு தெருவிளக்கு அமைக்க நகராட்சி பொது நிதியில் இருந்து இதற்கான ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீரிக்கலாம்.

(கோப்பு எண். 5556/2019/இ2)

**தீர்மானம் எண்.269 (பொருள் எண்.5) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.6</u>

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.33 சமயபுரம் மாரியம்மன் கோவில் தெரு 1 மற்றும் 2 பகுதியில் உள்ள சாலை மிகவும் சேதமடைந்து உள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், பள்ளி கல்லூரி செல்லும் மாணவ மாணவியர்கள் மிகவும் சிரமமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே மேற்கண்ட வார்டு எண்.33 சமயபுரம் மாரியம்மன் கோவில் தெரு 1 மற்றும் 2 பகுதியில் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–த்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் ரூ.5,00,000/–த்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5775/2019/இ1)

**தீர்மானம் எண்.270 (பொருள் எண்.6) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.7</u>

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.1 சீத்தாராம்பாளையம் அருந்ததியர் காலனி பகுதியில் புதியதாக திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–20–ன் கீழ் அமைக்கப்பட உள்ள புதிய கழிப்பிடத்திற்கு தெற்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை சீர்செய்து அமைக்கவும் மேலும் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்தின் Septic tank–ன் Slab Portion பழுதடைந்து உள்ளதால் அதனை சரி செய்ய வேண்டி உள்ளது. எனவே மேற்கண்ட வார்டு எண்.1, சீத்தரராராம்பாளையம் அருந்ததியர் காலனி பகுதியில் உள்ள புதியதாக கட்டப்பட உள்ள கழிப்பிடத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கவும் மற்றும் Septic tank Slab பகுதியை சரிசெய்யும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,80,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் ரூ.2,80,000/–த்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5776/2019/இ1)

**தீர்மானம் எண்.271 (பொருள் எண்.7) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.8</u>**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.16, சட்டையம்புதூர் தெரு எண்.10, தெரு எண்3 இணைப்பு சாலை மற்றும் தெரு எண்.3 பகுதிகளில் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பள்ளி கல்லூரி செல்லும் மாணவ மாணவியர்கள் மிகவும் சிரமமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே மேற்கண்ட வார்டு எண்.16 சட்டையம்புதூர் தெரு எண்.10, தெரு எண்.3 இணைப்பு சாலை மற்றும் தெரு எண்.3 பகுதியில் புதியதாக சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் ரூ.7,00,000/–த்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5777/2019/இ1)

**தீர்மானம் எண்.272 (பொருள் எண்.8) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.9</u>**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.7 SVAE தெரு எண்.1 பகுதியில் உள்ள சாலை மிகவும் தேசமடைந்துள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் பள்ளி கல்லூரி செல்லும் மாணவ மாணவியர்கள் மிகவும் சிரமமத்திற்கு உள்ளகின்றனர். எனவே மேற்கண்ட வார்டு எண்.7 SVAE தெரு எண்.1 பகுதியில் புதியதாக தார் சாலை அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,20,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் ரூ.9,20,000/–த்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5778/2019/இ1)

**தீர்மானம் எண்.273 (பொருள் எண்.9) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.10</u>**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.9 தொண்டிக்கரடு தைலாம்பிகை நகர் 5 பகுதியில் சாலை மிகவும் சேதமைடந்துள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ மாணவியர்கள் மிகவும் சிரமமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே மேற்கண்ட வார்டு எண்.9 தொண்டிக்கரடு தைலாம்பிகை நகர் தெரு 5 பகுதியில் புதியதாக தார் தார்சாலை அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,30,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் ரூ.6,30,000/–த்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5779/2019/இ1)

**தீர்மானம் எண்.274 (பொருள் எண்.10) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.11</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரம் மலேரியா பிரிவில் கொசுக்களை கட்டுப்படுத்தும் பொருட்டு நகரின் 33 வார்டு பகுதிகளிலும் கொசுகொல்லி புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. தற்போது கொசுக்கொல்லி மருந்தான பைரத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் (Pyrethrum 2% Extract) இருப்பு குறைவாக உள்ளதால் இனிவரும் மழைகாலங்களில் டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா போன்ற நோய்கள் நகரின் 33 வார்டு பகுதிகளிலும் பரவாமல் தடுக்க பைரத்திரம் 2% எக்ஸ்ராக்ட் மருந்து 300 லிட்டர் வாங்க அரசு அங்கீகரித்த மெசர்ஸ்.அருணை எண்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து வாங்கவும், அதற்கான உத்தேச செலவிம் ரூ.4,00,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினம் ரூ.4,00,000/–ற்கு நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட பணியினை அரசு அங்கீகரித்த மெசர்ஸ்.அருணை எண்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து மேற்கொள்ள பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5582/2019/எச்1)

**தீர்மானம் எண்.275 (பொருள் எண்.11) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பொதுசுகாதாரம் மலேரியா பிரிவில் கொசுக்களை கட்டுப்படுத்தும் பொருட்டு நகரின் 33 வார்டு பகுதிகளிலும் டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பயன்படுத்தும் தண்ணீர் தொட்டிகளில் உருவாகும் கொசுப்புழுக்களை அழிக்க டெமிபாஸ் எமுல்சிபையபல் 50% ஈசி (Temephas Emulsibiable 50% E.C ) மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் நகரின் 33 வார்டு பகுதிகளிலும் நோய்கள் பரவாமல் தடுக்க டெமிபாஸ் மருந்து 200 லிட்டர் அரசு அங்கீகரித்த மெசர்ஸ்.அருணை எண்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து வாங்கவும், அதற்கான உத்தேச செலவிம் ரூ.1,60,000/—ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினம் ரூ.1,60,000/—ற்கு நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட பணியினை அரசு அங்கீகரித்த மெசர்ஸ்.அருணை எண்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து மேற்கொள்ள பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5581/2019/எச்1)

**தீர்மானம் எண்.276 (பொருள் எண்.12) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் ஆண்டுதோறும் வணிக நிறுவனங்களிடம் வசூல் செய்யப்படும் D&O தொழில் உரிமம் சான்றிதழ் கட்டணம் இந்நகராட்சியில் மார்ச் 31, 2011ல் அரசிதழில் வெளியாகியுள்ள தொகையினை அடிப்படையாகக் கொண்டு தற்பொழுது வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே கடைகளில் வசூல் செய்யப்படும் தொழில்உரிமம் (D&O) கட்டணத்தை 25% உயர்த்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. D&O கட்டணம் உயர்வு தொடர்பான அறிக்கையை நாளிதழில் விளம்பரம் செய்யலாம். பொதுமக்களிடம் 30 தினங்களில் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகளை கோரலாம்.
3. நூாளிதழ் விளம்பர செலவினத்தை பொது நிதியில் ஏற்கலாம்.

(கோப்பு எண்.5548/19/எச்1)

**தீர்மானம் எண்.277 (பொருள் எண்.13) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் அனிமூர் உரக்கிடங்கில் இயங்கி வரும் பயோ கேஸ் பிளாண்ட் ஜெனரேட்டர் இயந்திரத்தை இயக்க உதவும் பேட்டரி காலாவதியாகிவிட்டதால் ஜெனரேட்டர் இயந்திரத்தை இயக்கி கேஸ்சை மின்சாரமாக மாற்ற ஏதுவாக 2 எண்ணிக்கை பேட்டரி புதிதாக வாங்கவும், அதனை அரசு அங்கீகாரம் பெற்ற திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட், திருச்செங்கோடு நிறுவனத்திடமிருந்து வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.34,000/—ற்கு (முப்பத்தி நான்காயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினம் ரூ,34,000/—ற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனத்திடம் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5546/2019/எச்1)

**தீர்மானம் எண்.278 (பொருள் எண்.14) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4ல் எட்டிமடைபுதூரில் OHT-அருகிலும் மற்றும் பொது கழிப்பிடம் அருகிலும் சலவைப்பட்டறை பகுதியிலும் 12 தெரு விளக்குகள் அமைத்துதரக் கோரி திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் நேரடி ஆய்வின்போது அப்பகுதியில் உள்ள பொமக்கள் இரவு நேரங்களில் சாலையில் செல்ல தெருவிளக்கு இல்லாததால் மிகவும் சிரமமாக உள்ளதால் மேற்கண்ட இடங்களுக்கு தெருவிளக்கு அமைக்கவும் நகராட்சி பொது நிதியில் இருந்து இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2.10 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ஆணையாளர் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், தனி அலுவலர் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.5556/2019/இ2)

**தீர்மானம் எண்.279 (பொருள் எண்.15) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

திருச்செங்கோடு நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள ரவுண்டானாவில் விவேகானந்தா கல்வி நிறுவனங்கள் மூலம் புல்வெளி மற்றும் செயற்கை நீரூற்று அமைத்து பராமரிக்க 5KW திறன்கொண்ட மின்இணைப்பை திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் அவர்களின் பெயரில் வாங்கிக் கொள்ளவும் மற்றும் அதற்குண்டான வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர மின் கட்டணத்தை விவேகானந்தா கல்வி நிறுவனம் மூலமே செலுத்திக் கொள்ள சம்மதம் தெரிவித்து விவேகானந்தா கல்வி நிறுவனங்கள் கடிதம் எண்.101/EB/2019 நாள்.19.11.2019ல் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண்.5921/2019/இ2)

**தீர்மானம் எண்.280 (பொருள் எண்.16) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

திருச்செங்கோடு நகராட்சிக்கு தனி குடிநீர் திட்டம் பணிக்கு IUDM 2018–19 மற்றும் 2019–20ன் கீழ் ரூ.83.85 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) நாமக்கல் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு புதியதாக 15.00 இலட்சம் லிட்டர் கொள்ளவுக் கொண்ட தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி சந்தைப்பேட்டையில் கட்ட இடையூறாக உள்ள பழைய பழுதடைந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை இடிக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2367/2019/டி2, நாள்.15.11.2019ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனேவ மேற்கண்ட சந்தைப்பேட்டையில் உள்ள பழைய பழுதடைந்த 10.00 இலட்சம் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினம் ரூ.9.9 இலட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.1492/2012/இ1)

**தீர்மானம் எண்.281 (பொருள் எண்.17) அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**